# 10

அறிவாளி

# தமிழ்

துணைவன்

## பத்தாம் வகுப்பு


## கௌசெல்ராமு பதிப்பகம் பி.லிட்.

**# 728, 7ஆவது பிளாக், முகப்பேர் மேற்கு, சென்னை - 600 037.**

**போன் : 044-26535245 ; அலைபேசி : 9176629095**

**மின்னஞ்சல் : kouselramu97@gmail.com**

**விலை : ₹ 140**

வெளியிடுவோர்
**பா. அமுதா செல்லமுத்து**
கௌசெல்ராமு பதிப்பகம் பி. லிட்.
# 728, 7ஆவது பிளாக், முகப்பேர் மேற்கு, சென்னை - 600 037.
தொடர்புக்கு : 044-26535245 ; 9176629095.

© உரிமை பதிப்பகத்தாருக்கு

ஏழாவது பதிப்பு (திருத்தப்பட்டது) : ஏப்ரல் 2026

# முன்னுரை

பெருமதிப்பிற்குரிய ஆசிரிய பெருமக்களுக்கும் மரியாதைக்குரிய மாணவ மாணவிகளுக்கும் வணக்கம்.

தங்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ப பாடநூலின் ஒவ்வொரு அலகிலும் உள்ள திறன் அறிவோம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், நிற்க அதற்குத்தக ... போன்றப் பகுதிகளிலுள்ள வினாக்கள் அனைத்தும் விடையளிக்கப்பட்டு அலகுவாரியாக தொகுக்கப்பட்டு இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

அவ்வினாக்கள் முந்தைய வினாத்தாட்களில் இடம் பெற்ற விவரத்தை செப் 2020, செப் 2021, மே 2022, ஆக 2022, ஏப் 2023, ஜூன் 2023, மார்ச் 2024, ஜூலை 2024, ஏப் 2025, ஜூலை 2025 மற்றும் மார்ச் 2026 எனக் குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

முந்தைய வினாத்தாட்களில் இடம் பெற்ற ஆனால் பாடநூலில் இடம்பெறாத சில முக்கியமான வினாக்களும் விடையளிக்கப்பட்டு அந்தந்தப் பகுதிகளில் கூடுதல் வினாக்களாக சேர்க்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து பயன்படுத்தும் வகையில் இந்த புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தங்களுடைய பயன்பாட்டில் ஏதேனும் கடினத் தன்மையை உணர்ந்தால் அவற்றை எங்களுடன் பகிர்ந்து கொண்டு அவை எதிர்வரும் பதிப்புகளில் சரிசெய்யப்பட வாய்ப்புத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன் . . . அறிவாளி ஆசிரியர் குழு.

# பொருளடக்கம்


| அலகு | பாடப்பகுதி | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | கவிதைப் பேழை | : அன்னை மொழியே | 2 |
| | உரைநடை உலகம் | : பாவாணர் பார்வையில் தமிழ்ச்சொல் வளம் | |
| | கவிதைப் பேழை | : காலக்கணிதம் | |
| | விரிவானம் | : புயலிலே ஒரு தோணி | |
| | கற்கண்டு | : சொல் | |
| 2 | உரைநடை உலகம் | : கேட்கிறதா என் குரல்! | 27 |
| | கவிதைப் பேழை | : பரிபாடல் | |
| | விரிவானம் | : மேகம் | |
| | | : பிரும்மம் | |
| | கற்கண்டு | : தொகாநிலைத் தொடர்கள் | |
| 3 | உரைநடை உலகம் | : விருந்து போற்றுதும்! | 46 |
| | கவிதைப் பேழை | : காசிக்காண்டம் | |
| | | : முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் | |
| | விரிவானம் | : கோபல்லபுரத்து மக்கள் | |
| | கற்கண்டு | : தொகைநிலைத் தொடர்கள் | |
| | வாழ்வியல் இலக்கணம் | : திருக்குறள் | |
| 4 | உரைநடை உலகம் | : மொழிபெயர்ப்புக் கல்வி | 70 |
| | கவிதைப் பேழை | : திருவிளையாடற்புராணம் | |
| | விரிவானம் | : புதிய நம்பிக்கை | |
| | கற்கண்டு | : இலக்கணம் - பொது | |
| 5 | உரைநடை உலகம் | : பன்முகக் கலைஞர் | 86 |
| | கவிதைப் பேழை | : கம்பராமாயணம் | |
| | விரிவானம் | : பாய்ச்சல் | |
| | கற்கண்டு | : அகப்பொருள் இலக்கணம் | |
| | வாழ்வியல் இலக்கணம் | : திருக்குறள் | |
| 6 | உரைநடை உலகம் | : சிற்றகல் ஒளி | 107 |
| | கவிதைப் பேழை | : சிலப்பதிகாரம் | |
| | | : முத்தொள்ளாயிரம் | |
| | விரிவானம் | : மங்கையராய்ப் பிறப்பதற்கே... | |
| | கற்கண்டு | : புறப்பொருள் இலக்கணம் | |
| 7 | உரைநடை உலகம் | : சங்க இலக்கியத்தில் அறம் | 125 |
| | கவிதைப் பேழை | : தேம்பாவணி | |
| | | : அக்கறை | |
| | விரிவானம் | : இராமானுசர் (நாடகம்) | |
| | கற்கண்டு | : பா - வகை | |
| | | : அலகிடுதல் | |

| அலகு | பாடப்பகுதி | பக்கம் |
|---|---|---|
| தேர்வுக்கு மிக மிக முக்கியமானப் பகுதி | மனப்பாடப்பகுதி | 147 |
| | படிவம் நிரப்புதல் | 149 |
| | காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல் | 150 |
| | மொழி பெயர்த்தல் | 151 |
| | கடிதம் எழுதுதல் | 153 |
| | பொதுக்கட்டுரைகள் | 156 |
| | பார்ப்போம்; பயன்படுத்துவோம்! (கலைச் சொற்கள்) | 163 |
| | பகுபத உறுப்பிலக்கணம் | 164 |
| | விடைக்கேற்ற வினா அமைத்தல் | 165 |
| | உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருதல் | 167 |
| | அலகிட்டு வாய்பாடு தருதல் | 170 |
| | தமிழ் எண்கள் | 172 |
| | அணி இலக்கணம் | 173 |
| | பலவுள் தெரிக வினாக்கள் | 174 |
| | வினாத்தாள் வடிவம் | 175 |
| | அரசுப் பொதுத்தேர்வு வினாத்தாள்கள் | 176 |

# பாடநூல்
# வினா விடைப்
# பகுதி
( பக்கம் 1 முதல் 145 வரை )

# 1

| | |
|---|---|
| கவிதைப்பேழை | : அன்னை மொழியே? |
| உரைநடை உலகம் | : பாவாணர் பார்வையில் தமிழ்ச்சொல் வளம் |
| கவிதைப்பேழை | : காலக்கணிதம் |
| விரிவானம் | : புயலிலே ஒரு தோணி |
| கற்கண்டு | : சொல் |

## பலவுள் தெரிக

### பாடநூல் வினாக்கள்

1. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் எது? ஜூலை 2024 மார்ச் 2026

(அ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது (ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்து விடாது

(இ) இகழ்ந்தால் இறந்து விடாது என்மனம் (ஈ) என்மனம் இறந்து விடாது இகழ்ந்தால்

**விடை: (அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது**

2. ‘காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்’ நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது - செப் 2021 ஆக 2022 ஏப் 2023 ஏப் 2025

(அ) இலையும் சருகும் (ஆ) தோகையும் சண்டும்

(இ) தாளும் ஓலையும் (ஈ) சருகும் சண்டும்

**விடை: (ஈ) சருகும் சண்டும்**

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் - செப் 2021 மே 2022 ஜூன் 2023

(அ) எந் + தமிழ் + நா (ஆ) எந்த + தமிழ் + நா

(இ) எம் + தமிழ் + நா (ஈ) எந்தம் + தமிழ் + நா

**விடை: (இ) எம் + தமிழ் + நா**

4. ‘கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது’ - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே - மார்ச் 2024 மார்ச் 2026

(அ) பாடிய; கேட்டவர் (ஆ) பாடல்; பாடிய

(இ) கேட்டவர்; பாடிய (ஈ) பாடல்; கேட்டவர்

**விடை: (ஈ) பாடல்; கேட்டவர்**

5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது - மே 2022 ஜூலை 2024 ஜூலை 2025

(அ) குலைப்பெயர் வகை (ஆ) மணிப்பெயர் வகை

(இ) கிளைப்பெயர் வகை (ஈ) இலைப்பெயர் வகை

**விடை: (ஆ) மணிப்பெயர் வகை**

**கூடுதல் வினாக்கள்**

6. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, செப் 2020
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.
(அ) ஆலமரம், வேப்பமரம் - ரு, க
(ஆ) ஆலமரம், வேலமரம் - ச, உ
(இ) அரசமரம், வேங்கைமரம் - க, உ
(ஈ) வேப்பமரம், ஆலமரம் - ச, சூ
**விடை:** (ஆ) ஆலமரம், வேலமரம் - ச, உ

7. ''நாற்றிசையும் செல்லாத நாடில்லை'' ; ''ஐந்து சால்பு ஊன்றிய தூண்'' - இந்த செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயர்களையும் அவற்றிற்கான தமிழ் எண்களையும் தேர்க. ஏப் 2023
(அ) நான்கு, ஐந்து - ச, ரு
(ஆ) மூன்று, நான்கு - ந, ச
(இ) ஐந்து, ஏழு - ரு, எ
(ஈ) நான்கு, ஆறு - ச, சூ
**விடை:** (அ) நான்கு, ஐந்து - ச, ரு

8. ஓர் ஆண்டின் மொத்த மாதங்களின் எண்ணிக்கையினைக் குறிக்கும் தமிழ் எண்ணைத் தேர்ந்தெடுக்க. ஜூன் 2023
(அ) க ரு
(ஆ) க உ
(இ) க ந
(ஈ) க ச
**விடை:** (ஆ) க உ

9. 'மொழி ஞாயிறு' என்றழைக்கப்படுபவர் யார்? ஆக 2022
(அ) தமிழழகனார்
(ஆ) கம்பர்
(இ) தேவநேயப் பாவாணர்
(ஈ) வைரமுத்து
**விடை:** (இ) தேவநேயப் பாவாணர்

10. 'சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன் ஆக 2022
சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்' - என்று கூறியவர்
(அ) திரு.வி.க
(ஆ) க. சச்சிதானந்தன்
(இ) நம்பூதனார்
(ஈ) தனிநாயக அடிகள்
**விடை:** (ஆ) க. சச்சிதானந்தன்

11. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மார்ச் 2024
(அ) சிங்கப்பூர்
(ஆ) மலேசியா
(இ) இந்தியா
(ஈ) இலங்கை
**விடை:** (ஆ) மலேசியா

12. மலர்விழி பாடினாள் - இத்தொடர் மே 2022
(அ) பொதுமொழி
(ஆ) தனிமொழி
(இ) தொடர்மொழி
(ஈ) அடுக்குத்தொடர்
**விடை:** (இ) தொடர்மொழி

## குறுவினா

### பாடநூல் வினாக்கள்

***1. 'பலகை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.***

**விடை:**

* பலகை - மரம் (தனிமொழி)
* பல + கை - பல கைகள் (தொடர்மொழி)

***2. "மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.***

**விடை:**

* சிலப்பதிகாரம்
* மணிமேகலை

***3. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.***  மார்ச் 2024
***ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.***

**விடை:**

* சரியான தொடர்கள்: * ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
  * ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
* பிழையான தொடர்: ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
* பிழைக்கான காரணம்: வாழைத்தாறு - வாழைசீப்பு - வாழைப்பழம் - என்ற வரிசை மாறி உள்ளது.

***4. "கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது"
பாடல் அடிகளில் உள்ள மோனை, எதுகைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.***

**விடை:**

சீர்மோனை: கொள்வோர், கொள்க
அடிஎதுகை: கொள்வோர், உள்வாய்

***5. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.***

**விடை:**

* செந்நெல்
* வெண்ணெல்
* கார்நெல்
* சம்பா
* மட்டை

**கூடுதல் வினாக்கள்**

6. ***"மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்களைத்தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.*** மே 2022 ஜூலை 2024

**விடை:**

* சீவக சிந்தாமணி
* வளையாபதி
* குண்டலகேசி

7. ***'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.***

**விடை:** மார்ச் 2024

வேங்கை - மரம் (தனிமொழி)

வேம் + கை - வேகும் கை (தொடர்மொழி)

8. ***தமிழ்நாட்டில் மட்டும் விளையக்கூடிய சிறுகூலங்களின் பெயர்களை எழுதுக.*** ஏப் 2023

**விடை:**

* வரகு
* காடைக்கன்னி
* குதிரைவாலி
* சம்பா

9. ***தாவரங்களின் இளம் பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்களில் நான்கினை எழுதுக.***

**விடை:** மே 2022

நாற்று - நெல்<u>நாற்று</u>

கன்று - மாங்<u>கன்று</u>

பிள்ளை - தென்னம்<u>பிள்ளை</u>

மடலி - பனை<u>மடலி</u>

## சிறுவினா

**பாடநூல் வினாக்கள்**

1. ***தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?***

**விடை:** மே 2022 ஜூலை 2025 மார்ச் 2026

* தமிழானது, பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனி.
* கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசு.
* தமிழ் செழுமை மிக்கது, உயிரானது.
* பழம்பெருமையும் தனக்கெனத் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்டது.
* வியக்கத்தக்க நீண்ட நிலைத்த தன்மை உடையது.

*6. இன்சொல் பேசுவதால் விளையும் நன்மைகள் மற்றும் தீயசொல் பேசுவதால் ஏற்படும் தீமைகளைப் பட்டியலிடுக.* ஜூலை 2024

**விடை:**

| இன்சொல் பேசுவதன் நன்மைகள் | தீய சொல் பேசுவதன் தீமைகள் |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

## நெடுவினா

### பாடநூல் வினாக்கள்

*1. நாட்டுவளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழிநின்று விளக்குக.*

**விடை:**

* ஒரு நாட்டின் வளமும் அந்த நாட்டின் சொற்களின் வளமும் மிகுந்த தொடர்புடையன.
* ஒரு நாட்டில் பயன்படுத்தப்படும் மொழியானது அந்த நாட்டின் நாகரிகத்தை உணர்த்துகிறது.
* நாட்டு வளம் சொல் வளத்தை உருவாக்குகிறது. சொல் வளம் நாட்டு வளத்தை உணர்த்துகிறது.
* ஒரு நாடும் அதன் மொழியும் அங்கு வசிப்பவர்களுக்கு இரு கண்கள் ஆகும்.
* விளைபொருள்களின் மிகுதியால் ஒரு நாட்டின் சொல்வளம் பெருகுகிறது.
* வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி போன்ற தானியங்கள் தமிழ்நாட்டைத்தவிர வேறெங்கும் விளைவதில்லை.
* இலையைக் குறிக்க அதன் வன்மை, மென்மை ஆகிய தன்மைகளைக் கொண்டு தாள், ஓலை, தோகை என பலவகைப் பெயர்கள் தமிழில் உண்டு.
* இவ்வாறு பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்யும் மக்களின் மதிநுட்பத்தை சொல்வளம் உணர்த்துகிறது.

*2. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.* செப் 2021

*"கவிஞன் யானோர் காலக் கணிதம்*
*கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!*
*புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்*
*பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!*
*இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்*
*இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!*
*ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்*
*அவனும் யானுமே அறிந்தவை; அறிக!"* - கண்ணதாசன்

**விடை:**

**நயம் பாராட்டுதல்**

* **திரண்ட கருத்து:** கவிஞனாகிய நானே காலத்தைக் கணிக்கிறேன். உள்ளத்துக் கருத்துகளை, சொற்களாக்கி மற்றவர் அறியும் வண்ணம் உருவம் கொடுத்துப் படைப்பதால் நானும் ஒரு கடவுள்தான். பொன்னினும் உயர்ந்தவை எனது கருத்துக்கள். சரியானவற்றைச் சொல்வதும், தவறானவற்றைத் தவிர்ப்பதும் எனது பணி. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று செயல்களையும் செய்வதால் நானும் கடவுள் தான்.
* **தொடை நயம்:**

(அ) **மோனைத் தொடை:** அடி/சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது.

**அடிமோனை:** கவிஞன், கருப்படு
புவியில், பொன்னினும்
இசைவளி, இவைதவ
ஆக்கம், அவனும்

**சீர்மோனை:** கவிஞன், காலக்
புவியில், புகழுடை
பொன்னினும், பொருளென்
இசைவரி, இயம்பு
ஆக்கல், அளித்தல், அழித்தல்
அவனும், அறிந்தவை

(ஆ) **எதுகைத் தொடை:** அடி/சீர் தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது.

**அடி எதுகை:** இவை சரி, இவைதவறு
**சீர் எதுகை:** கருப்படு, உருப்பட

(இ) **இயைபுத் தொடை:** இறுதி எழுத்து / சீர் / அசை ஒன்றி வருவது.

கணிதம், வைப்பேன்
தெய்வம், செல்வம்

(ஈ) **முரண் தொடை:** எதிரெதிர் பொருள் தரும்படி வருவது.

ஆக்கல், அழித்தல் → எதிரெதிர் செயல்கள்
சரி, தவறு → எதிரெதிர் பொருள்கள்

* **அணி நயம்:** கவிஞர் தன்னைக் கடவுளுக்கு இணையாக உருவகப்படுத்தி உள்ளதால் உருவக அணி ஆயிற்று.

***3. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?***

**விடை:** செப் 2020 | ஏப் 2023 | மார்ச் 2026

**புயலிலே ஒரு தோணி**

**வருணனைகள்:**

* சூறாவளி மாரியும் காற்றும் கூடிக்கலந்து ஆடிக்குதித்துக் கெக்கலித்தன.
* அலையோட்டம் தெரியவில்லை - வானுடன் கடல் கலந்துவிட்டது.

| தாவரப்பகுதி | குறிக்கும் சொல் |
|---|---|
| கரும்பின் அடிப்பகுதி | கழி |
| மரத்தின் கிளைப் பிரிவு | கவை |
| மரத்தின் காய்ந்தப்பகுதி | சுள்ளி |
| சோளத்தின் இலைப்பகுதி | தோகை |
| நெல்லின் நுனிப்பகுதி | தளிர் |
| பூவின் தோற்றம் | அரும்பு |
| மாங்காய் பிஞ்சு | வடு |
| வாழைக்குலை | தாறு |
| பூச்சி அரித்த கனி | சொத்தை |
| தேங்காய் மேற்பகுதி | மட்டை |
| பனை மரத்தின் வித்து | கொட்டை |
| இளம் கத்தரிசெடி | நாற்று |

**சொல்லாக்கத்திற்கான தேவை:**

* தற்கால அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ற புதிய சொல்லாக்கம் தேவை. எ.கா. cellphone - கைபேசி.
* ஒவ்வொரு துறையிலும் உயர் கல்விக் கேற்ப புதிய சொல்லாக்கம் தேவை.
* போட்டியும் போராட்டமும் நிறைந்த உலகில் தமிழினம் வெற்றி பெற காலத்திற்கேற்ப தமிழ் மொழியில் சொல்லாக்கம் தேவை.
* மக்களிடையே பரந்த குணமும் நிறைந்த ஆளுமையும் நிலைத்து நிற்க புதிய சொல்லாக்கம் தேவை.
* தமிழின் தனித்தன்மை மாறாமலிருக்க தமிழுக்கு புதிய சொல்லாக்கம் தேவை.

## மொழியை ஆள்வோம்!

***1. படித்துச் சுவைக்க.***

***பாடலில், மரம் என்னும் சொல், இடத்திற்கேற்பப் பொருள் தருவதாய் 11 இடங்களில் இடம்பெற்றுள்ளது. பொருள்களைப் பொருத்திப் படித்துச் சுவைக்க.***

*"மரமது[1] மரத்தில்[2] ஏறி*
*மரமதைத்[3] தோளில் வைத்து*
*மரமது[4] மரத்தைக்[5] கண்டு*
*மரத்தி[6] னால் மரத்தைக்[7] குத்தி*
*மரமது[8] வழியே சென்று*
*வளமனைக் கேகும் போது*
*மரமது[9] கண்ட மாதர்*
*மரமுடன்[10] மரம்[11] எடுத்தார்"*

*- சுந்தரகவிராயர்.*

| | |
|---|---|
| 1 | அரசன் (அரச மரம்) |
| 2 | மா - குதிரை (மாமரம்) |
| 3 | வேல் (கருவேலம்) |
| 4, 9 | அரசன் |
| 5, 7 | புலி (வேங்கை) |
| 6 | வேல் |
| 8 | காட்டு வழி |
| 10 | ஆல் (ஆலமரம்) |
| 11 | அத்தி (அத்தி மரம்)<br>ஆல் + அத்தி = ஆரத்தி |

**2. மொழிபெயர்ப்பு.** செப் 2021

***1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela***

***2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going - Rita Mae Brown*** ஏப் 2025

**விடை:**

1. நீ ஒருவரிடம் ஏதேனும் ஒரு மொழியில் பேசினால் அது அவரது அறிவைத்தொடும்; ஆனால், அவருடைய சொந்த மொழியில் பேசினால் அது அவரது மனதைத்தொடும். - நெல்சன் மண்டேலா.
2. மொழியானது ஒரு பண்பாட்டிற்கான வழிகாட்டி. அது மனிதர்கள் எங்கிருந்து வந்தார்கள், எங்கே செல்கிறார்கள் என்பதைச் சொல்லும் - ரிட்டா மே பிரவுன்.

**3. பிழைகளைத் திருத்தி எழுதுக.** மே 2022 ஜூன் 2023 ஜூலை 2025

***“தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை***
***தேரும் சிலப்பதி காறமதை***
***ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்***
***ஓதி யுனர்ந்தின் புருவோமே”***

**விடை:**

“தே<u>னி</u>லே ஊ<u>றி</u>ய செந்தமிழின் - சுவை
தே<u>று</u>ம் சிலப்பதி கா<u>ர</u>மதை
ஊனிலே எம்முயிர் உ<u>ள்ளள</u>வும் - நிதம்
ஓதி யு<u>ண</u>ர்ந்தின் பு<u>று</u>வோமே”

**4. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.**
***(குவியல், குலை, மந்தை, கட்டு)***

| சொல் | கூட்டப்பெயர் |
|---|---|
| கல் | |
| புல் | |
| பழம் | |
| ஆடு | |

**விடை:**

| சொல் | கூட்டப்பெயர் |
|---|---|
| கல் | குவியல் (கற்குவியல்) |
| புல் | கட்டு (புற்கட்டு) |
| பழம் | குலை (பழக்குலை) |
| ஆடு | மந்தை (ஆட்டுமந்தை) |

**விடை:**

**நயம் பாராட்டுதல்**

* **திரண்ட கருத்து:** தமிழானது, தேனினும் இனிமையானது; செம்மை பெற்றது; தென்னாட்டில் சிறந்து விளங்குவது; அறிவும், செறிவும், நுட்பமும், கொண்டது; உணர்வோடு உணர்வானது; வானத்தைவிட உயர்ந்தது; மனித இனத்திற்கு இரு கண்களாக விளங்குவன; வளம் மிக்கது; தழைத்து ஓங்குவது; குளிர்ச்சி மிகுந்தது என நமச்சிவாயர் கூறுகிறார்.
* **தொடை நயம்:**

(அ) **மோனைத் தொடை:** அடி/சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது.

**அடிமோனை:** தேனினும், தென்னாடு
ஊனினும், உணர்வினுக்
வண்டமிழ், வயங்குநன்
தனித்தமிழ், தண்டமிழ்

**சீர்மோனை:** தென்னாடு, திகழ்ந்தென்
வானினும், வண்டமிழ்
ஒளிர்வுறும், ஒண்டமிழ்
தானனி, தனித்தமிழ்

(ஆ) **எதுகைத் தொடை:** அடி/சீர் தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது.

**சீர்எதுகை:** தேனினும், இனியநற்
உணர்வினுக், குணர்வதாய்

(இ) **இயைபுத் தொடை:** இறுதி எழுத்து/சீர்/அசை ஒன்றி வருவது.
'மொழியே' என்னும் சொல் அடிதோறும் இயைபாக வந்துள்ளது.

* **அணி நயம்:** 'மொழி' என்ற சொல் ஒரே பொருளில் பலமுறை வந்து 'சொற்பொருட்பின் வருநிலை அணி' ஆனது.
* **சந்த நயம்:** தேனினும், ஊனினும், வானினும், தானனி மற்றும் ஒவ்வொரு அடியின் இறுதியிலும் மொழியே என்ற சொல் இடம்பெற்று சந்த (இசை/ஒலி) நயம் பெற்றுள்ளது.
* **பொருள் நயம்:**
செந்தமிழ் - செம்மையான தமிழ்
ஒண்டமிழ் - அறிவும், செறிவும், நுட்பமும் கொண்ட தமிழ்
வண்டமிழ் - வளம் மிக்க தமிழ்

## மொழியோடு விளையாடு

1. ***சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.***
***தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ***
***(மேகலை, தேன், பூ, விண், மழை, மணி*** செப் 2021***)***

**விடை:**

| | | |
|---|---|---|
| தேன்மழை | பொன்மணி | பூவிலங்கு |
| விளக்குவான் | பொன்மழை | செய்தேன் |
| மணிமேகலை | பூமணி | மணிவிளக்கு |
| வான்மழை | பூமழை | செய்வான் |

2. எண்ணுப்பெயர்களைக் கண்டுபிடித்துத் தமிழ் எண்களில் எழுதுக.

தமிழ் எண்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | க | 6 | சா |
| 2 | உ | 7 | எ |
| 3 | ங | 8 | அ |
| 4 | ச | 9 | கூ |
| 5 | ரு | 10 | ய / க0 |

| செய்யுள்அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | | |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | | |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | | |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | | |

விடை:

| செய்யுள்அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | நான்கு, இரண்டு | ச, உ |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | க000 |

3. அகராதியில் காண்க.

அடவி, அவல், சுவல், செறு, பழனம், புறவு

விடை:

அடவி - காடு, சோலை, நந்த வனம், திரள், கூட்டம்.

அவல் - நெல் இடியல், விளை நிலம், பள்ளம், குளம்.

சுவல் - பிடரி, முதுகு, மேடு, தொல்லை.

செறு - வயல், குளம், பாத்தி, கோபம்,

பழனம் - வயல், மருத நிலம், பொய்கை.

புறவு - புறா, காடு, முல்லை நிலம்

4. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



விடை: ஜூலை 2024 மார்ச் 2026

மனிதா முகத்திலென்ன வாட்டம் ?
மூளையின் அறை பூட்டப்பட்டுள்ளதோ ?
திறவுகோல் எதுவென அறியாயோ ?
தெளிவாய் உரைப்பேன் கேட்பாயே !
நூலெடுத்துப் படித்திடு பக்குவமாய் !
நும்முகம் மலர்ந்திடும் பார் மகிழ்ச்சியாய் !
யாரும் பேசிடார் இகழ்ச்சியாய் !
பாரே போற்றிட உயர்ந்திடுவாய் !

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை - இணையவழி விண்ணப்பப்பதிவு

*முழுப்பெயர்* : ____________________

*பாலினம்* : ____________________

*கைபேசி எண்* : ____________________

*மின்னஞ்சல் முகவரி* : ____________________

*பிறந்த தேதி* : ____________________

*இரத்த வகை* : ____________________

*தந்தையின் பெயர்* : ____________________

*தாயாரின் பெயர்* : ____________________

*தொடர்பு முகவரி*

| கதவு எண் / தெருவின் பெயர் / கிராமம் (அல்லது) நகரத்தின் பெயர் | மாவட்டம் | அஞ்சல் குறியீட்டு எண் |
|---|---|---|
| | | |

*நிரந்தர முகவரி*

| கதவு எண் / தெருவின் பெயர் / கிராமம் (அல்லது) நகரத்தின் பெயர் | மாவட்டம் | அஞ்சல் குறியீட்டு எண் |
|---|---|---|
| | | |

*மாநிலம்* : *தமிழ்நாடு* *இனம் : இந்தியன்*

*ஆதார் எண்* : XXXX XXXX XXXX

*உங்கள் புகைப்படத்தைப் பதிவேற்றவும்* :



*கடவுச்சொல்* : XXXXXXXXXXXXXXX

*கடவுச்சொல்லை உறுதிப்படுத்தவும்* : XXXXXXXXXXXXXXX

விடை:

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை - இணையவழி விண்ணப்பப்பதிவு

*முழுப்பெயர்* : நி. பூங்குழலி

*பாலினம்* : பெண்

*கைபேசி எண்* : 99999 99999

*மின்னஞ்சல் முகவரி* : *poonguzhali@gmail.com*

*பிறந்த தேதி* : 26-06-2007

*இரத்த வகை* : **O +*ve***

*தந்தையின் பெயர்* : அ. நிலவன்

*தாயாரின் பெயர்* : நி. சந்திரா

*தொடர்பு முகவரி*

| கதவு எண் / தெருவின் பெயர் / கிராமம் (அல்லது) நகரத்தின் பெயர் | மாவட்டம் | அஞ்சல் குறியீட்டு எண் |
|---|---|---|
| எண்:112, கம்பர் தெரு, பாரதியார் நகர் | கடலூர் | 606 110 |

*நிரந்தர முகவரி*

| கதவு எண் / தெருவின் பெயர் / கிராமம் (அல்லது) நகரத்தின் பெயர் | மாவட்டம் | அஞ்சல் குறியீட்டு எண் |
|---|---|---|
| எண்:112, கம்பர் தெரு, பாரதியார் நகர் | கடலூர் | 606 110 |

*மாநிலம்* : *தமிழ்நாடு* *இனம் : இந்தியன்*

*ஆதார் எண்* : **XXXX XXXX XXXX**

*உங்கள் புகைப்படத்தைப் பதிவேற்றவும்* :



*கடவுச்சொல்* : **XXXXXXXXXXXXXXX**

*கடவுச்சொல்லை உறுதிப்படுத்தவும்* : **XXXXXXXXXXXXXXX**

**மாநில அளவில் நடைபெற்ற 'கலைத்திருவிழா' போட்டியில் பங்கேற்று 'கலையரசன்' பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

காந்தி தெரு,
10.06.2025

அன்புள்ள நண்பன் அமுதனுக்கு,

வணக்கம். நான் நலமாக இருக்கின்றேன். நீ நலமாக இருக்கின்றாயா? இல்லத்தில் அனைவரும் நலமாக உள்ளார்களா என்பதை அறிய ஆவலுடன் உள்ளேன். உன்னிடம் இருக்கின்ற கலைத்திறமைகளை உடனிருந்து நான் பார்த்திருக்கின்றேன். பல போட்டிகளில் கலந்துகொண்டு நீ பரிசுகளைப் பெற்றுள்ளாய்.

தமிழ்நாடு அரசு நடத்திய கலைத்திருவிழாப் போட்டிகளிலும் கலந்துகொண்டு மூன்று போட்டிகளில் மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளாய். இதன் காரணமாகக் 'கலையரசன்' பட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கைகளால் பெற்றுள்ளாய். உனக்குக் கிடைத்த பெருமையால் நண்பர்கள் அனைவருமே பெருமையும் ஊக்கமும் அடைகிறோம். உன்னைப் போல பட்டங்கள்பெற முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

இதைப்போல, வரக்கூடிய பல போட்டிகளிலும் கலந்துகொண்டு இன்னும் பல பரிசுகளைப் பெற உளமார வாழ்த்துகின்றேன். கோடை விடுமுறையில் நமது கிராமத்தில் சந்திப்போம்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள நண்பன்,
மா. குறளரசன்.

உறைமேல் முகவரி
பெறுநர்
ஆ. தமிழ்ச்செல்வன்,
50, அன்னை இல்லம்,
கபிலர் தெரு,
கோயமுத்தூர் 641 001.

# தேர்வுக்கு மிகமிக முக்கியமானப் பகுதி

## ( பக்கம் 146 முதல் 180 வரை )

**10ஆம் வகுப்பு தமிழ் பாடத்தில் எளிமையாக 65 மதிப்பெண்கள் பெற, கற்போதோடு மட்டுமல்லாமல், மீண்டும் மீண்டும் பயிற்சி செய்ய வேண்டிய பாடப் பகுதிகள்**

| வினா எண் | பாடப்பகுதி | மதிப் பெண் | பக்கம் |
|---|---|---|---|
| 21 | மனப்பாடப்பகுதி (திருக்குறள்) | 2 | 147 |
| 34 | மனப்பாடப்பகுதி (பிற பாடல்கள்) | 3 | 147, 148 |
| 41 | படிவம் நிரப்புதல் | 5 | 149 |
| 40 | காட்சியைக் கண்டு (படம் உணர்த்தும் கருத்தை) கவினுற எழுதுதல் | 5 | 150 |
| 42 | மொழி பெயர்த்தல் | 5 | 151 |
| 39 | கடிதம் எழுதுதல் | 5 | 153 |
| 45 | பொதுக்கட்டுரை எழுதுதல் | 8 | 156 |
| | படிப்போம்; பயன்படுத்துவோம்! (கலைச் சொற்கள்) | 2 | 163 |
| | பகுபத உறுப்பிலக்கணம் | 2 | 164 |
| | விடைக்கேற்ற வினா அமைத்தல் | 2 | 165 |
| | உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருதல் | 3 | 167 |
| | அலகிட்டு வாய்பாடு தருதல் | 3 | 170 |
| | தமிழ் எண்கள் | 2 | 172 |
| | அணி இலக்கணம் | 3 | 173 |
| 1-15 | பலவுள் தெரிக | 15 | 174 |
| | மொத்த மதிப்பெண்கள் | 65 | |

# மனப்பாடப்பகுதி (2 + 3 = 5 மதிப்பெண்கள்)

## வினா எண்- 21 (2 மதிப்பெண்கள்)

### அலகு-3 : திருக்குறள்

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. **

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். **

பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். *

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். **

### அலகு-5 : திருக்குறள்

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல். *

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். *

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. **

இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

## வினா எண்- 34 (3 மதிப்பெண்கள்)

### அலகு-1 : அன்னை மொழியே

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே! *****

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! *

### அலகு-1 : காலக்கணிதம்

மாற்றம் எனது மானிடத் தத்துவம்; *
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை! *
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்! *
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

### அலகு-3 : காசிக்காண்டம்

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே

* இக்குறியிடப்பட்ட எண்ணிக்கையில் இந்த செய்யுள் பகுதி முந்தைய பொதுத்தேர்வு வினாத்தாட்களில் இடம்பெற்றுள்ளன.

# படிவம் நிரப்புதல் (5 மதிப்பெண்கள்)

வினா எண்: **41**

*குறிப்பு: படிவம் நிரப்புதல் வினாக்களுக்கான விடைகளில் பெயர், முகவரி போன்றவற்றை வெவ்வேறு தேர்வுகளில் வினாத்தாட்களில் இடம்பெறும் வினாக்களுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ள வேண்டும்.*

## *வினாக்கள்*

1. *கடலூர் மாவட்டம், பாரதியார் நகர், கம்பர் தெருவிலுள்ள 112 ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் நிலவனின் மகள் பூங்குழலி, நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கால்பந்து விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர், தம்மை பூங்குழலியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள* ***உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை*** *நிரப்புக.*

   **விடை:** பார்க்க: பக்கம்-25 செப் 2021 | ஏப் 2025

2. *எண்-6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் பூங்கொடி, கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப்பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தன்னை பூங்கொடியாகப் பாவித்து* ***பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை*** *நிரப்புக.*

   **விடை:** பார்க்க: பக்கம்-44 செப் 2020

3. *அமுதன் தன் தந்தை மாணிக்கமணி அவர்களிடம் நூலகத்தில் உறுப்பினர் ஆக வேண்டினான். அவரும் அமுதனிடம் 200/- ரூபாயும், 15 காந்தி தெரு, குமாரபாளையம் நீலகிரி மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார். கிளை நூலகத்திற்குச் சென்ற அமுதனாக, தேர்வர் தன்னைக் கருதி, கொடுக்கப்பட்ட* ***நூலக உறுப்பினர் படிவத்தை*** *நிரப்புக.* ஏப் 2023 | ஜூலை 2024 | ஜூலை 2025 | மார்ச் 2026

   **விடை:** பார்க்க: பக்கம்-85

4. *வீட்டு எண்.21, வ.உ.சிதம்பரனார் தெரு, கரூர் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்த வெற்றிச்செல்வனின் மகன் குணசேகரன் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை குணசேகரனாகக் கருதி கொடுக்கப்பட்ட* ***மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை*** *நிரப்புக.*

   **விடை:** பார்க்க: பக்கம்-124 மே 2022 | ஜூன் 2023 | மார்ச் 2024

## *பயிற்சிக்காக*

5. *பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டு படிவத்தை நிரப்புக.* ஆக 2022

   *பெயர்: அருளன், தந்தை: செல்வம், முகவரி: கதவு எண்.25, திலகர் தெரு, மதுரை வடக்கு-2.*

   *விடை: வினா எண். 2-இன் விடையில் வினா எண். 5-இன் விவரங்களாக மாற்றிக் கொள்ளவும்.*

வினா எண்: 40

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல் (5 மதிப்பெண்கள்)

*1.* ஜூலை 2024 மார்ச் 2026



விடை: பார்க்க: பக்கம்-17 ; வினா எண்-4

*2.*



விடை: பார்க்க: பக்கம்-39 ; வினா எண்-3

*3.* ஆக 2022



விடை: பார்க்க: பக்கம்-64 ; வினா எண்-4

*4.* மார்ச் 2024



விடை: பார்க்க: பக்கம்-80 ; வினா எண்-4

*5.* ஜூலை 2025



விடை: பார்க்க: பக்கம்-104 ; வினா எண்-4

*6.*



விடை: பார்க்க: பக்கம்-115 ; வினா எண்-1

*7.* ஏப் 2023



விடை: பார்க்க: பக்கம்-119 ; வினா எண்-5

*8.* ஜூன் 2023 ஏப் 2025



விடை: பார்க்க: பக்கம்-142 ; வினா எண்-5

# மொழிபெயர்த்தல் (5 மதிப்பெண்கள்)

வினா எண்: 42

1. *மொழிபெயர்ப்பு.* செப் 2021

   1. ***If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela***
   2. ***Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going - Rita Mae Brown***

**விடை:** பார்க்க: பக்கம்-12 ; வினா எண்-2

2. *மொழி பெயர்க்க.* மே 2022 ஜூலை 2024 மார்ச் 2026

***The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.***

**விடை:** பார்க்க: பக்கம்-36 ; வினா எண்-3

3. *மொழிபெயர்க்க.*

***Respected ladies and gentlemen! I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam litterature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.***

**விடை:** பார்க்க: பக்கம்-59 ; வினா எண்-2

4. *மொழிபெயர்ப்பு.*

Translation is an art in itself. No one can do that. A translator should be neutral and not attached to any language. Specifically, he should be proficient in both the languages i.e. both the language and the source language. They should be familiar with the social and cultural conditions of both the languages.

**விடை:** பார்க்க: பக்கம்-77 ; வினா எண்-2

# படிப்போம்; பயன்படுத்துவோம்! (2 மதிப்பெண்கள்)

## அலகு-1

Vowel - உயிரெழுத்து
Consonant - மெய்யெழுத்து
Homograph - ஒப்பெழுத்து
Monolingual - ஒரு மொழி
Conversation - உரையாடல்
Discussion - கலந்துரையாடல்

## அலகு-2

Storm - புயல்
Tornado - சூறாவளி
Tempest - வன்புயல்
Land Breeze - நிலக்காற்று
Sea Breeze - கடற்காற்று
Whirlwind - சுழற்காற்று

## அலகு-3

Hospitality - விருந்தோம்பல்
Wealth - செல்வம்
Baby shower - வளைகாப்பு
House warming - புதுமனை புகுவிழா
Feast - விருந்து

## அலகு-4

Translation - மொழி பெயர்ப்பு
Culture - பண்பாடு
Human Resource - மனிதவளம்
Transfer - மாறுதல்
Multi media - பல்துறை ஊடகம்
Exhibition - பொருட்காட்சி
East Indian Railways - இருப்புப் பாதை
Revolution - புரட்சி
Strike - வேலை நிறுத்தம்
Interpreting - விளக்குதல்
Head phone - காதணி கேட்பி
Mike - ஒலி வாங்கி
Camel - ஒட்டகம், வடம் (கயிறு)
Telegraph - தொலைவரி
Television - தொலைக்காட்சி
Telephone - தொலைபேசி
Telescope - தொலைநோக்கி
Telemetry - தொலைஅளவியல்
Transcribe - படியெடுத்தல்
Transfer - மாறுதல்
Transform - உருமாற்றுதல்
Transact - செயல்படுத்துதல்

## அலகு-5

Playwright - நாடக ஆசிரியர்
Screenplay - திரைக்கதை
Storyteller - கதை சொல்லி
Aesthetics - அழகியல், முருகியல்

## அலகு-6

Agreement - ஒப்பந்தம்
Discourse - சொற்பொழிவு
Monarchy - முடியாட்சி
Border - எல்லை
Rebellion - கிளர்ச்சி

## அலகு-7

Happiness - மகிழ்ச்சி
Sceptor - செங்கோல்
Charity - ஈகை
Gratuity - பணிக்கொடை
Truth - வாய்மை

## கூடுதல் சொற்கள்

Artifacts - கலைப்பொருட்கள்
Myth - கட்டுக்கதை
Consulate - துணைத்தூதரகம்
Folk Literature - நாட்டுப்புற இலக்கியம்
Classical Literature - செவ்விலக்கியம்
Belief - நம்பிக்கை
Philosopher - மெய்யியலாளர்
Patent - காப்புரிமை
Storm - புயல்
Biotechnology - உயிரித் தொழில்நுட்பம்
Emblem - சின்னம்

# பகுபத உறுப்பிலக்கணம் (2 மதிப்பெண்கள்)

## அலகு-2

1. கிளர்ந்த =கிளர் + த் (ந்) + த் + அ
கிளர் - பகுதி
த் (ந்) - சந்தி ; ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

## அலகு-3

2. உரைத்த =உரை + த் + த் + அ
உரை - பகுதி
த் - சந்தி
த் - இறந்த காலஇடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

3. வருக =வா(வரு) + க
வா - பகுதி
வரு எனத் திரிந்தது விகாரம்
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

4. பதிந்து =பதி + த்(ந்) + த் + உ
பதி - பகுதி
த் (ந்) - சந்தி (ந்-ஆனது விகாரம்)
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

## அலகு-4

5. அமர்ந்தான் = அமர் + த்(ந்) + த் + ஆன்
அமர் - பகுதி
த்(ந்) - சந்தி, 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

6. தணிந்தது = தணி + த்(ந்) + த் + அ + து
தணி - பகுதி, த் - சந்தி
த்(ந்) - ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - சாரியை
து - படர்க்கை வினைமுற்று விகுதி

## அலகு-6

7. மயங்கிய =மயங்கு + இ(ன்) + ய் +அ
மயங்கு - பகுதி
இ (ன்) - இறந்தகால இடைநிலை ; 'ன்' புணர்ந்து கெட்டது.
ய் - உடம்படுமெய்
அ - பெயரெச்ச விகுதி

8. கொண்ட =கொள் (ண்) + ட் + அ
கொள் - பகுதி (ண் ஆனது விகாரம்)
ட் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

## அலகு-7

9. அறியேன் =அறி + ய் + ஆ + ஏன்
அறி - பகுதி
ய் - சந்தி
ஆ - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

10. ஒலித்து =ஒலி + த் + த் + உ
ஒலி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

## கூடுதல் சொற்கள்

11. வாழ்க = வாழ் + க
வாழ் - பகுதி
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

# விடைக்கேற்ற வினா அமைத்தல் (2 மதிப்பெண்கள்)

**1. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.** ஆக 2022

*(அ) சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் செய்குதம்பிப் பாவலர்.*

*(ஆ) பரஞ்சோதி முனிவர் திருமறைக் காட்டில் பிறந்தவர்.*

**விடை:**

(அ) சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் யார்?

(ஆ) பரஞ்சோதி முனிவர் எங்கு பிறந்தார்?

**2. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.** மார்ச் 2024

*(அ) அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது.*

*(ஆ) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி.*

**விடை:**

(அ) அறிவியலின் வளர்ச்சி எதை விரிவாக்குகிறது ?

(ஆ) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது எது ?

**3. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.** ஏப் 2023

*(அ) கிரேக்க அறிஞர் ஹிப்பாலஸ் என்பவர் பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்.*

*(ஆ) தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்.*

**விடை:**

(அ) பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தியது யார்?

(ஆ) தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது எது?

**4. விடைகளுக்கு ஏற்ற வினாக்கள் அமைக்க.** செப் 2020

*(அ) ம.பொ.சி. அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடி பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார்*

*(ஆ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.*

**விடை:**

(அ) அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடி பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டவர் யார்?

(ஆ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் என்னென்ன கொடுத்தனர்?

**5. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.** ஜூன் 2023

*(அ) 'தமிழாதுள்ளி எழு' என்னும் தலைப்புடைய துண்டறிக்கையை கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே ம.பொ.சி. வழங்கினார்.*

*(ஆ) விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரமே திருக்குறளில் அமைந்திருக்கிறது.*

**விடை:**

(அ) எந்த தலைப்புடைய துண்டறிக்கையை கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே ம.பொ.சி. வழங்கினார் ?

(ஆ) எதை வலியுறுத்த ஓர் அதிகாரமே திருக்குறளில் அமைந்திருக்கிறது ?

***6. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க :*** செப் 2021

***(அ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.***

***(ஆ) தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் தமிழ்த்திரு. இரா.இளங்குமரனார்.***

**விடை:**

(அ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?

(ஆ) தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் யார்?

***7. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.*** மே 2022

***(அ) சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி. இலக்கிய அறிவு பெற்றார்.***

***(ஆ) 1906-ஆம் ஆண்டு வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.***

**விடை:**

(அ) சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி. எந்த அறிவு பெற்றார்?

(ஆ) எந்த ஆண்டு வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்?

***8. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.*** ஜூலை 2024

***(அ) சாலைகளில் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையான விதி.***

***(ஆ) ம.பொ.சி. சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக இலக்கிய அறிவு பெற்றார்.***

**விடை:**

(அ) சாலை விதிகளில் முதன்மையான விதி எது?

(ஆ) ம.பொ.சி. எதைக் கேட்பதன் மூலமாக இலக்கிய அறிவு பெற்றார்?

***9. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.*** ஏப் 2025

***(அ) புதிய படைப்புகள் உருவாக மொழிபெயர்ப்பு உதவுகிறது.***

***(ஆ) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன்.***

**விடை:**

(அ) புதிய படைப்புகள் உருவாக எது உதவுகிறது?

(ஆ) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் யார்?

# உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருதல் (3 மதிப்பெண்கள்)

1. *உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.* செப் 2020

*தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.*

*(அ) போர் அறம் என்பது எவற்றைக் குறிக்கிறது?*

*(ஆ) யாரோடு போர் செய்யக்கூடாது என்று ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்?*

*(இ) எவ்வாறு போர்புரிய வேண்டும்?*

**விடை:**

(அ) வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமை.

(ஆ)தம்மைவிட வலிமை குறைந்தாரோடு

(இ) பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும்.

2. *உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.* ஆக 2022 மார்ச் 2024

*பருப் பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகி, ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது.*

*(அ) பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.*

*(ஆ)புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?*

*(இ) பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.*

**விடை:**

(அ) மீண்டும் மீண்டும்

(ஆ) தொடர்ந்து பெய்த மழையால்

(இ) பெய்மழை

3. *உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.* மே 2022

*அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.*

# பத்தாம் வகுப்பு : அரசு பொதுத்தேர்வு வினாத்தாள் : மார்ச் 2026

காால அளவு : 3.00 மணி நேரம்] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி-I (மதிப்பெண்கள் : 15)

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 × 1 = 15
(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. "இருவர் உரையாடுவது போன்ற ஓசை" என்பது ______.
(அ) அகவலோசை (ஆ) துள்ளலோசை (இ) தூங்கலோசை (ஈ) செப்பலோசை

2. இரவீந்திரநாத் தாகூர் ______ மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ______ மொழியில், மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது
(அ) ஆங்கில, வங்காள, (ஆ) வங்காள, ஆங்கில
(இ) வங்காள, தெலுங்கு (ஈ) தெலுங்கு, ஆங்கில

3. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் யாவர் ?
(அ) உதியன் ; சேரலாதன் (ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
(இ) பேகன் ; கிள்ளிவளவன் (ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

4. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைந்தது –
(அ) வேற்றுமை உருபு (ஆ) எழுவாய் (இ) உவம உருபு (ஈ) உரிச்சொல்

5. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் எது ?
(அ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது (ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
(இ) இகழ்ந்தால் இறந்து விடாது என்மனம் (ஈ) என்மனம் இறந்து விடாது இகழ்ந்தால்

6. செய்தி (1) : ஒவ்வோர் ஆண்டும் சூன் 15–ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி (2) : காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
செய்தி (3) : இந்தியாவிற்குத் தேவையான மழை அளவில் எழுபது விழுக்காடு மழையைத் தென்மேற்குப் பருவக்காற்றாகக் கொடுக்கின்றேன்.
(அ) செய்தி (1) மட்டும் சரி (ஆ) செய்தி (1), (2) ஆகியன சரி
(இ) செய்தி (3) மட்டும் சரி (ஈ) செய்தி (1), (3) ஆகியன சரி

7. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது ;
வானம் இருண்டது ; வாடைக் காற்று வீசியது.
பொருத்தமான தலைப்பைத் தேர்க.
(அ) உயிர்ப்பின் ஏக்கம் (ஆ) நீரின் சிலிர்ப்பு
(இ) மொட்டின் வருகை (ஈ) காற்றின் பாடல்

8. 'வா' என்ற வேர்ச்சொல்லின் விளித்தொடரைத் தேர்க.
(அ) குழந்தை வந்தது (ஆ) வந்த குழந்தை
(இ) வந்து நின்றது (ஈ) குழந்தையே வா !

**9.** நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு – இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே,

(அ) பாண்டிய நாடு, சேர நாடு (ஆ) சோழ நாடு, சேர நாடு
(இ) சேர நாடு, சோழ நாடு (ஈ) சோழ நாடு, பாண்டிய நாடு

**10.** "கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது" – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –

(அ) பாடிய ; கேட்டவர் (ஆ) பாடல் ; பாடிய
(இ) கேட்டவர் ; பாடிய (ஈ) பாடல் ; கேட்டவர்

**11.** புதன்கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்ட நாள்காட்டியில் அடுத்த வார செவ்வாய்க்கிழமையைத் தமிழெண்ணில் தேர்க.

(அ) க (ஆ) அ (இ) ரு (ஈ) எ

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு **(12,13,14,15)** விடை தருக.

"விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல் "

**12.** இப்பாடல் இடம்பெற்ற நூலைத் தேர்க.

(அ) கம்பராமாயணம் (ஆ) காசிக்காண்டம்
(இ) தேம்பாவணி (ஈ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

**13.** பாடலின் ஆசிரியரைத் தேர்க.

(அ) பரஞ்சோதிமுனிவர் (ஆ) இளங்கோவடிகள்
(இ) அதிவீர ராம பாண்டியர் (ஈ) கம்பர்

**14.** 'செப்பல் ' என்ற சொல்லின் பொருள்

(அ) வருதல் (ஆ) வியத்தல் (இ) எழுதல் (ஈ) கூறுதல்

**15.** சீர் எதுகைச் சொற்களைத் தேர்க.

(அ) ஒருவன் – எதிரின் (ஆ) திருந்துற – வருக
(இ) விருந்தினனாக – வியத்தல் (ஈ) உரைத்தல் – செப்பல்

பகுதி-II (மதிப்பெண்கள் : 18)

பிரிவு – 1

குறிப்பு: **எவையேனும் நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **21– ஆவது** வினாவிற்குக் **கட்டாயமாக** விடையளிக்கவும். $4 \times 2 = 8$

**16.** கரப்பிடும்பை இல்லார் – இத்தொடரின் பொருள் கூறுக.

**17.** விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.

(அ) முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.
(ஆ) ஒரு நாட்டின் நாட்டுவளம், சொல்வளத்தை உருவாக்குகின்றது.

18. மென்மையான மேகங்கள், துணிச்சலும், கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக.
19. செங்கீரை ஆடுதலில் எந்தெந்த அணிகலன்கள் சூட்டப்படுவதாக முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் குறிப்பிடுகிறது ?
20. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்ட ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
21. ‘உலகு’ – என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு–2

குறிப்பு : **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். $5 \times 2 = 10$

22. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.
சேரர்களின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.
23. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடர்புகளை முழுமை செய்க.
(அ) காட்டு விலங்குகளைச் ______ தடைசெய்யப்பட்டுள்ளது.
(ஆ) செய்த தவறுகளைச் ______ திருந்த உதவுகிறது.
(சுட்டல், சுடுதல்)
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக. அமர்ந்தான்
25. கட்டுரை படித்த – இச்சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபைப் பயன்படுத்தித் தொடரை விரித்து எழுதுக.
26. பொதுவியல் திணை பற்றிக் குறிப்பெழுதுக.
27. கலைச்சொற்கள் தருக. (அ) Happiness (ஆ) Story teller
28. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக. (அ) மலை – மாலை (ஆ) விடு – வீடு.

(பகுதி-III (மதிப்பெண்கள் : 18)

பிரிவு –1

குறிப்பு : **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் **சுருக்கமாக** விடையளிக்கவும். $2 \times 3 = 6$

29. பலதுறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது ?
30. ‘‘தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்’’ இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார். பழங்காலத்தில் கடல்கடந்த பயணங்கள் அனைத்தும் காற்றால் இயக்கப்பட்ட பாய்மரக் கப்பல்களால்தான் நிகழ்ந்தன. காற்றின் ஆற்றலை, ‘வளி மிகின் வலி இல்லை’ என்று ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார். இதுபோன்றே மதுரை இளநாகனார் கடும்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.
(அ) உலகம் குறித்துத் தொல்காப்பியர் கூறுவது யாது ?
(ஆ)கடல்கடந்த பயணங்கள் பழங்காலத்தில் எவ்வாறு நிகழ்ந்தன ?
(இ) மதுரை இளநாகனாரின் காற்று பற்றிய கருத்தை எழுதுக.

பிரிவு–2

குறிப்பு: **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் **34–க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். $2 \times 3 = 6$

**32.** தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை ?

**33.** ''தான் எவற்றையெல்லாம் அறியவில்லை'' – என்று கருணையன் கூறுகிறார் ?

**34.** அடிபிறழாமல் எழுதுக.

(அ) 'மாற்றம்'..... எனத் தொடங்கி 'அட்சய பாத்திரம் !' என முடியும் 'காலக்கணிதம்' பாடல்.

அல்லது

(ஆ) 'அள்ளல் பழனத்(து)' எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரம் பாடல்.

பிரிவு–3

குறிப்பு : **எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு மட்டும் **சுருக்கமாக** விடையளிக்கவும். $2 \times 3 = 6$

**35.** மார்கழித் திங்கள் அதிகாலை நேரத்தில் மக்கள் நடைப்பயிற்சி மேற்கொண்டனர். சிலர் மிதிவண்டியில் சென்றனர். சாலை ஓரத்தில் இருந்த வீட்டின் மதிலை ஒட்டிச் செங்காந்தள் மலர்கள் பூத்துக் குலுங்கியபடி இருந்தன. அவற்றைப் பார்த்தபடியே வீடு சென்றேன். பத்தியைப் படித்துத் தொகைநிலைத் தொடர்களைக் கண்டறிந்து எழுதுக.

**36.** இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

**37.** அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

பகுதி-IV (மதிப்பெண்கள் : 25)

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். $5 \times 5 = 25$

**38.** (அ) 'சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்' என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.
அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே ! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே ! அறிஞர் பெருமக்களே ! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றாமாகக் கம்பன் காட்டும் கவி..... தண்டலை மயில்கள் ஆட ..... இவ்வுரையைத் தொடர்க.

அல்லது

(ஆ) ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் கூறிய கருத்துகளை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

**39.** (அ) மாவட்ட அளவில் நடைபெற்ற 'பெண்கள் நாட்டின் கண்கள்'எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

அல்லது

(ஆ) உங்கள் பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலையைச் சீரமைத்தல் வேண்டி மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**40.** காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



**41.** நீலகிரி மாவட்டம், பாரதிதாசன் நகர், எண்.7. பூம்பொழில் தெருவில் வசிக்கும் மதிவேந்தன் என்பவரது மகன் புகழேந்தி மாவட்ட மைய நூலகத்தில் நூலக உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை புகழேந்தியாக எண்ணி கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

**42.** (அ) மாணவர் நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்கள், அதனால் ஏற்படும் நன்மைகள் ஐந்தினைப் பட்டியலிடுக. அல்லது

(ஆ) மொழிபெயர்க்க.

The Golden Sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start tweeting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

பகுதி-V (மதிப்பெண்கள் : **24**)

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் **விரிவான** விடையளிக்கவும். $3 \times 8 = 24$

**43.** (அ) இலக்கியச் சான்றுடன் உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக. அல்லது

(ஆ) காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.

**44.** (அ) இயற்கையோடு இணைந்த வாழ்வினைப் 'பிரும்மம்' கதைவழி விவரித்து எழுதுக. அல்லது

(ஆ) 'புயலிலே ஒரு தோணி' கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும், ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.

**45.** (அ) 'தமிழ்மொழியின் சிறப்பு' என்ற தலைப்பில் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
முன்னுரை – தமிழின் தொன்மை – சான்றோர் வளர்த்த தமிழ் – சொல்வளம் மிக்கது – வளர்தமிழ் – முடிவுரை. அல்லது

(ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் குறிப்புகளைக் கொண்டு கட்டுரையாக்குக.

குறிப்புகள் : முன்னுரை – கலைத்திருவிழா நிகழ்விடம் – கலைநிகழ்ச்சிகள் – கவர்ந்த கலைநிகழ்ச்சி – கலைகள் வளர்ப்போம் – முடிவுரை.

-oOo-